**Spl.CC.No.80/2019**

**27-11-2020** ஆம் தேதி அன்று சாட்சி **P.W.8** சிவக்குமார் மீண்டும் மனுவின் பேரில் **(CMP.No. 628/2020)** மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டுஎதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

**28.11.2011** அன்று நான் உதவி சிங்காநல்லூர் உபகோட்ட உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வந்தேன்**.** அப்போது எனக்கு மேல் அதிகாரி யார் என்றால்**,** செயற்பொறியாளர்**,** ஒண்டிப்புதூர் ஆவார்**.** செயற்பொறியாளருக்கு மேல் அதிகாரி யார் என்றால் மேற்பார்வை பொறியாளர்**,** மாநகர் ஆவார்**.** மேற்படி மேற்பொறியாளருக்கு மேல் அதிகாரி தலைமைப் பொறியாளர் ஆவார்**.** இவ்வழக்கில் நான் சாட்சியாக செல்லவேண்டி எனது உயர் அதிகாரிகள் எவரும் எழுத்து பூர்வமாக எந்த உத்திரவும் வழங்கவில்லை என்றால் சரிதான்**. 28.11.2011** அன்று மாலை **6** மணிக்கு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்குச் சென்றபொழுது அங்கு அந்த பிரிவு அலுவலகத்தின் அலுவலர்கள் நிறையப்பேர் இருந்தார்கள்**.** வேறு யாரும் இல்லையா என்றால்**,** அதைப் பற்றி எனக்குத் தெரியாது**.** நிறையப்பேர் இருந்தார்கள்**. 28.11.2011** அன்று மாலை **6** மணிக்கு என்னிடம் வழக்குச் சம்மந்தமான ஆவணங்களையோ அல்லது வழக்கு சம்மந்தமான சங்கதிகளையோ என்னிடம் கொடுக்கவுமில்லை**,** சொல்லவுமில்லை**. 28.11.2011** அன்று மாலை நான் கூடுதல் கண்காணிப்பாளர் திருமதி சண்முகபிரியா அவர்களிடம் என்னை நான் அறிமுகப்படுத்திக் கொடுத்தேன்**.** அவர் மறுநாள் காலை அதாவது **29.11.2011** காலை **5** மணிக்கு என்னை அலுவலகத்திற்கு வரும்படிச் சொன்னார்**. 29.11.2011** ஆம் தேதி காலை **5** மணிக்கு நான் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்குச் சென்றிருந்தபோது அங்கு நிறையப்பேர் இருந்தார்கள்**.** யார்**,** யார் என்று என்னால் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது**.** டி**.**எஸ்**.**பி அறங்கராஜன் அப்போது அங்கு இருந்தாரா என்றால்**,** ஆம் இருந்தார்**. Additional SP** எனக்கு அவரை அறிமுகம் செய்து வைத்தார்**.** பாலசுப்பிரமணியம் வருவாய் ஆய்வாளர்**,** கருமத்தம்பட்டி என்பவரும் அங்கு இருந்தார்**.** டி**.**எஸ்**.**பி அறங்கராஜன் அவர்களிடம் என்னை

**Additional SP** அறிமுகம் செய்து வைத்தபொழுது இவ்வழக்கு சம்மந்தமான விவரங்களை என்னிடம் சொல்லவில்லை. டி.எஸ்.பி அறங்கராஜன் என்னிடம் இவ்வழக்கு முதல் தகவல் அறிக்கைப் பற்றியோ, இவ்வழக்குப் பற்றிய விவரத்தையோ என்னிடம் சொல்லவில்லை. கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் **29.11.2011** அன்று காலை **5** மணிக்கு அறிக்கை செய்துவிட்டு **5.30** மணிக்கு அங்கிருந்து புறப்பட்டோம். அவ்வாறு அங்கிருந்து கிளம்பும்போது என்னோடு டி.எஸ்.பி. அறங்கராஜன், வருவாய் ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் மற்றும் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் என்னோடு வந்தார்கள். காவல் துறையினர் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்றால் அது பற்றிய குறிப்புகள் எனக்குத் தெரியாது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திலிருந்து சோதனை செய்ய சென்ற இடத்திற்குச் செல்ல **45** நிமிடம் பிடித்தது. அந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திலிருந்து **Forest guest house** சென்று பின்னர் அங்கிருந்து சோதனை மேற்கொள்ளும் இடத்திற்குச் சென்றோம்.ஆதலால் **45** நிமிடம் பிடித்தது. **Forest guest house** ற்கு எதற்காக சென்றோம் என்றால் அங்கு நாங்கள் எதுவும் செய்யவில்லை. நாங்கள் வாகனத்திலேயே அமர்ந்து இருந்தோம். கூடுதல் கண்காணிப்பாளர் சண்முக பிரியா விசாரணையில் **Forest guest house** ற்கு சென்று பின்னர் அங்கிருந்து சோதனை மேற்கொண்ட இடத்திற்குச் சென்றதாக சொல்லியிருக்கிறேனா என்றால், அது பற்றி தற்பொழுது எனக்கு ஞாபகமில்லை. முதல் விசாரணையில் **Forest guest house** ற்கு சென்ற விவரத்தை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. **Forest guest house** எங்கு உள்ளது என்றால் அதன் அமைவிடத்தை தற்போது என்னால் குறிப்பிட்டுச் சொல்ல இயலாது. நான் தற்போது திருப்பூரில் பணிபுரிந்து வருகிறேன். கோவை மாநகரத்தில் உதவி செயற்பொறியாளராக எத்தனை வருடம் பணிபுரிந்தேன் என்றால் **7,8** வருடங்கள் பணிபுரிந்தேன். கோயமுத்தூரில் நான் மொத்தம் சுமார் **15** வருடங்கள் பணிபுரிந்து இருக்கிறேன். கோயமுத்தூரில் உள்ள **Location** எனக்குத் தெரியும் என்றால் ஓரளவிற்குத் தெரியும். அன்றைய தினம் விடியற்காலையில் சென்றதால் **Location** ஐ என்னால் சரியாக சொல்ல முடியவில்லை. **Forest guest house** எங்கு உள்ளது என்றால், கோயமுத்தூரில்தான் உள்ளது. எந்த இடத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. **Forest guest house** என்பதை புதிதாக வழக்கிற்காகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. **Forest guest house** லிருந்து சோதனை மேற்கொண்ட இடம் எவ்வளவு தூரம்

என்றால் சுமார் **13** கி.மீ தூரம் இருக்கும். சோதனை மேற்கொள்ளவுள்ள இடத்திற்குச் செல்லும்வரை வழக்குப் பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. சோதனை மேற்கொண்ட இடம் சிங்காநல்லூரில் வீடுகள் நிறைந்த பகுதியில் உள்ளது என்றால் சரிதான். மாநகரில் ஒரு முக்கியமான இடம் என்றால் சரிதான். அந்த பகுதியில்வசித்து வரும் மதிப்புமிக்க பொது மக்களில் எவரேனையும் சாட்சியாக இருப்பதற்கு அழைத்துச் சென்றோமா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சோதனை மேற்கொண்ட இடம் யாருக்கு சொந்தமான வீடு என்றால், சிவா என்பவருக்கு சொந்தமான வீடு என அந்த வீட்டிற்கு அருகில் செல்லும்போது என்னிடம் சொன்னார்கள். வீட்டின் உரிமையாளர் சிவா தான் என்பதற்கு ஆவணங்கள் எதையும் சரிபார்த்தேனா என்றால் இல்லை. வீட்டில் சிவா இருந்தாரா என்றால், நாங்கள் சென்ற சமயத்தில் வீட்டில் சிவா இல்லை. அந்த வீட்டில் நிறைய ஆவணங்களை சோதனை செய்தார்கள். அந்த ஆவணங்கள் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. வங்கி வைப்பீடு, கணக்கு புத்தகங்கள் முதலியன போன்ற ஆவணங்கள் அங்கு இருந்தனவா என்றால் அது எனக்குத் தெரியாது. தங்க ஆபரணங்கள் அங்கு இருந்தனவா என்றால், கொஞ்சம் தங்க ஆபரணங்கள் இருந்தன. அந்த தங்க ஆபரணங்களின் எடை மற்றும் அதன் விவரம் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். ரொக்கம் எவ்வளவு இருந்தது என்பதும் எனக்குத் தெரியாது. சொத்துப் பத்திரங்கள் மற்றும் இதர பத்திரங்கள் எதுவும் அங்கு இருந்தனவா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. அங்கு இரண்டு ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. ஒன்று சிங்காநல்லூர் சார்பதிவாளர் அனுப்பிய சமாதான திட்டத்திற்கான அறிவிப்பாகும். மற்றொன்று வருமான வரித்துறையினர் சிவாவிற்கு அனுப்பிய அறிவிப்பாகும். கைப்பற்றப்பட்ட ஆவணங்களை சிவாவின் மகன் கண்ணனிடம் ஒப்படைத்து விட்டு வந்தோம். டி.எஸ்.பி சோதனை செய்யவுள்ள இடத்தின் வரைபடத்தை வரைந்தார்களா என்றால், அவ்வாறு வரைந்தார்களா என்பது குறித்து தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. பார்வை மகசர் தயார் செய்தார்களா என்றால் அவ்வாறான தலைப்பில் ஏதும் தயார் செய்யவில்லை. வீடு சோதனை பட்டியல் என தயார் செய்தார்கள். வீடு சோதனை ஜாபிதாவில் ஒரு கையெழுத்தும், சோதனைப் பட்டியலில் சுமார் **10** கையெழுத்தும் நான் செய்தேன். நான் கையொப்பம் செய்தபோது, சோதனைப் பட்டியலை, ஜாபிதாவை படித்துப்பார்த்து கையெழுத்து செய்ததாக குறிப்பாக எழுதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பார்வை மகசரும், வீடு சோதனை ஜாபிதா ஒன்றும் தயார் செய்தார்கள் என கூடுதல் கண்காணிப்பாளர்

விசாரணையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சோதனைப் பட்டியலைத்தான் நான் அவ்வாறு சொல்லியுள்ளேன். முதல் விசாரணையில் பார்வை மகசர் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சோதனைப் பட்டியலைத்தான் நான் பார்வை மகசர் எனக் குறிப்பிட்டுள்ளேன். பார்வை மகசரை காண்பித்து கூடுதல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பார்வை மகசர் என்பதை சோதனைப் பட்டியலைத்தான் குறிப்பதாக நினைத்துச் சொல்லியுள்ளேன். **Ex.P.9** ஆவணத்தில் வீடு சோதனை பட்டியலில் எனது பெயரக்கு கீழே உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், சிங்காநல்லூர் என எழுதப்பட்டும், அதற்கு கீழே பாலசுப்பிரமணியம் வருவாய் ஆய்வாளர், கருமத்தம்பட்டி பிர்கா என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். **Ex.P.9-**ல் எனது வசிப்பிட முகவரியும், பாலசுப்பிரமணியத்தின் வசிப்பிட முகவரியும் குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். **Ex.P.9** ஆவணம் கோயமுத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும், அதில் நானும், டி.எஸ்.பி அறங்கராஜனும், பாலசுப்பிரமணியனும், கண்ணனும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளோம் என்றாலும் சரியல்ல. **Ex.P.9** ஆவணத்தில் கண்ணன் எல்லாப் பக்கங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். **Ex.P.9-**ல் கண்டுள்ள ஆவணங்கள் இரண்டையும் நான் படித்துப் பார்த்தேனா என்றால், நான் படித்துப் பார்க்கவில்லை. சோதனைக்குச் சென்றதாகவும், சோதனைக்குப் பின்னர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்ததாகச் சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> இல்லை

ஓம்/சிவக்குமார்